(11)
167034

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1980 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் (திருத்தச்) சட்டம்

---

[1980, ஏப்ரில் மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1980, ஏப்றில் மாதம் 25 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 35 தபாற் செலவு : சதம் 35

# 1980 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் (திருத்தச்) சட்டம்

[1980, ஏப்பிறல் மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 57/79

## 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1980 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும் 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரச கமத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (vii) ஆம், (viii) ஆம் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(vii) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க சபையின் உறுப்பினர்களை நியமிக்கலாம் ;

(viii) அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சபையின் தவிசாளரை நியமிக்கலாம் ; அத்துடன்

(ix) அத்தகைய ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய சபையின் பிரதித் தவிசாளரை நியமிக்கலாம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) அமைச்சர், பணிப்பாளர் சபைக்கு ஒரு தவிசாளரை பணிப்பாளர்களிடையே இருந்து நியமித்தல் வேண்டும் ; அத்துடன் ஒரு பிரதித் தவிசாளரையும் நியமிக்கலாம்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"பணிப்பாளர் சபையின் தவிசாளரும் பிரதித் தவிசாளரும்.

16. பணிப்பாளர் சபையின் தவிசாளரது அல்லது பிரதித் தவிசாளரது பதவிக் காலமானது அத்தகைய சபையில் அவர் உறுப்பினராகவுள்ள காலமாக இருத்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் அமைச்சருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் தமது பதவியை முன்னரே துறக்கலாம், அல்லது அமைச்சர், எந்த நேரத்திலும், காரணம் ஒன்றைக் காட்டாமலே தவிசாளரின் அல்லது பிரதித் தவிசாளரின் நியமனத்தை முடிவுறுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) பணிப்பாளர் சபையின் தவிசாளர், அவர் சமுகமளித்திருக்கும் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைவகித்தல் வேண்டும். அத்தகைய சபையின் கூட்டம் எதற்கும் தவிசாளர் வராதவிடத்து, பணிப்பாளர் சபையின் பிரதித் தவிசாளர், அல்லது பிரதித் தவிசாளர் வராதவிடத்து அல்லது பிரதித் தவிசாளர் நியமிக்கப்பட்டிராதவிடத்து, சமுகமளித்துள்ள பணிப்பாளர்களுள் பெரும்பான்மையோரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைவகித்தல் வேண்டும்.".